மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண்.60/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராமலட்சுமி (பி.வா.சா.2) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

18.11.2025

**<u>வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –</u>**

1. நீதிமன்றத்திற்கு எனது கணவர் என்னுடன் வந்துள்ளார். அரிஜனா காலனி நிலத்திற்கும் கிழக்கு, இலுப்பையூர் விவசாய கூட்டுறவு சங்கதிற்கு பாத்தியமான நிலத்திற்கும் மேற்கு, சுப்பிரமணியன் சேர்வை நிலத்திற்கு தெற்கு, கமுதி ரோட்டிற்கும் வடக்கு இந்த நான்குமாலுக்கு உட்பட்ட இடம் குறித்து இவ்வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்து ஆதியில் எனது தாயார் பவானியம்மாளுக்கு பாத்தியபட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை 09.08.1996ல் எனக்கு கிரையமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் என்னிடம் இல்லை. மேற்படி நான் கிரையம் பெற்ற சொத்தைதான் 30.06.2011ல் சின்னசாமி, எட்டப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம்தான் அந்த கிரைய ஆவணம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

2. வா.சா.ஆ.2 ஆவணத்தை சின்னசாமிக்கும், எட்டப்பனுக்கும் கிரையம் எழுதி கொடுக்கும் போது என்னிடம் படித்து காண்பித்தார்களா அல்லது நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படித்து காண்பித்தார்கள். ஆவணத்தில் எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தை எனக்கு வாசித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. எந்த சொத்தை கிரையம் கொடுப்பதாக என்னிடம் வாசித்து காண்பித்தார்கள் என்றால் செல்லையா வீட்டு ரோட்டிற்கு கிழக்கு, மற்ற

எல்கை மால்கள் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சொத்தின் பட்டா எண், சர்வே எண் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய சின்னசாமியும், எட்டப்பனும் 29.03.2012ம் தேதியில் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் நான் கிரையம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் முன் ஆவணமாக வா.சா.ஆ.2 ஆவணம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் முன் ஆவணமாக வா.சா.ஆ.1 ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ1 ஆவணத்தில் உள்ள நான்கு மால்களை குறிப்பிடாமல் வா.சா.ஆ.2 ஆவணத்தில் வேறு நான்குமால்கள் எதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 ஆவணத்தின் நான்குமால்கள் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் நான் அந்த சொத்தை எழுதி கொடுக்கவே இல்லை.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் அயல்நாட்டில் அவ்வபோது சம்பாதித்த தொகையை நேரில் வரும்போதும், வங்கி கணக்கிலும் கொடுப்பார் என்று சொல்லியுள்ள நிலையில், வங்கி பரிமாற்ற ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் பெயரில் கிரையம் வாங்கியிருந்தாலும், தாவா சொத்து எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர் கொடுத்த தொகையை கொடுத்து கிரையம் வாங்கினேன். ஒரு சொத்தை கணவனுக்காக மனைவி பெயரில் கிரையம் பெற்றிருந்தாலும், மனைவிக்காக கணவர் கிரையம் பெற்றிருந்தாலும் யார் பெயரில் கிரையம் பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்குதான் சொத்து பாத்தியம் என்ற சட்டநிலை உள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பி கலைசெல்வன் உள்ளாரா என்றால் உயிருடன் உள்ளார். அவரை இவ்வழக்கில் எனது தரப்பில் விசாரணை செய்யபோறேனா என்றால் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலம் பாரா 3ல் குறிப்பிடப்பட்டுள்ள என் சகோதரர் கலைச்செல்வன், அவர் என் தாயார் பவானியம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து ஒன்றினை தான் சின்னசாமிதேவருக்கும், எட்டப்பனுக்கும் பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதாகவும், அந்த கிரையத்திற்கு தாயாரின் வாரிசுகளில் ஒருவர் என்ற அடிப்படையில் நானும் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்பதால் என்னை பத்திரத்தில் கையெழுத்து போட வரும்படி

என் சகோதரர் கலைசெல்வன் என்னை பத்திர ஆபீசிற்கு அழைத்து சென்றார் என்று தெரிவித்துள்ள நிலையில், அது எந்த வருடம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி நான் தெரிவித்த மேற்படி ஆவணத்தின் சொத்து விபரத்தை என்னிடம் வாசித்து காட்டினார்களா என்றால் வாசித்து காட்டவில்லை. எதுவுமே தெரியாமல், எந்த சொத்து என்று தெரியாமல் எவ்வாறு கையொப்பம் செய்தேன் என்றால் செல்லையா வீட்டிற்கு அருகில் உள்ள காடு என்று சொன்னார்கள்.

4. எனது அம்மா சின்னசாமிக்கும், எட்டபனுக்கும் எழுதி கொடுத்த சொத்தை பி.வா.சா.ஆ.2 ஆவணமாக எனது கணவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது அம்மா பூர்வீக சொத்து என்றுதான் குறிப்பிட்டு 2ம் லக்க சொத்தினை சின்னசாமிக்கும், எட்டபனுக்கும் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை 1996ல் எனக்கு கிரையம் கொடுத்த பின்னர் வேறு யாருக்கும் கியைரம் கொடுக்க எனது தாயாருக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நான் எழுதி கொடுத்த சம்மத பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சம்மத பத்திரத்தின் தேதியை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தினைதான் நான் வா.சா.ஆ.2–ன் மூலமாக சின்னசாமி, எட்டபனுக்கு எழுதி கொடுத்து அதை அவர்கள் வா.சா.ஆ.3 மூலமாக வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றாலும், வா.சா.ஆ2 ஆவணத்தில் நான்குமால்கள் தவறாக உள்ளதை பயன்படுத்தி வாதிக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிஎஸ்என்எல் நிறுவனத்துடன் நான் தாவா சொத்தில் கோபுரம் அமைப்பதற்கு ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் தான் பி.வா.ஆ5 என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் தெரியாது. பி.வா.ஆ.5–ன் மூலம் தொலைகோபுர அமைக்க நான் எழுதி கொடுத்துள்ள சர்வே எண்.131/6 என்றால் சரிதான். அந்த தொலைகோபுரத்தின் ஒருபகுதி சர்வே எண்.131/3ல் அமைந்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. வாதி பிஎஸ்என்எல் நிறுவனத்தையும் 1ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் சேர்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர் பிஎஸ்என்எல் நிறுவனத்தினர் வாடகை தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி வந்தனர் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட

பின்னர் அந்த கோபுரத்தை அகற்றி விட்டார்களா என்றால் இல்லை, ஆண்டனா தவிர மற்ற அனைத்தையும் எடுத்துவிட்டார்கள். தாவா சொத்து சம்மந்தமாக இடைக்கால உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதால்தான் வாதி குடியிருப்பதற்காக தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் சரியல்ல, அது எங்கள் சொத்து. தற்போது தாவா சொத்து வா.சா.ஆ.16 புகைப்படத்தில் உள்ளதுபோல்தான் உள்ளது என்றால் சரிதான். நான் எழுதிகொடுத்த சம்மத பத்திரத்தை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால், என் தம்பியிடம்தான் கேட்க வேண்டும். நான் நீதிமன்ற ஆணையர் மூலமாக வாதி கருப்பையா தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்த பகுதி எவ்வளவு என்று துல்லியமாக அளந்து கேட்டு மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னசாமிக்கும் எட்டப்பனுக்கும் நான் எழுதி கொடுத்த ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் நான் எழுதி கொடுக்கவில்லை. பழனிசாமி நாடார் மகன் சுரேந்திரன் என்பவருக்கு எனது கணவருக்கு பாத்தியபட்ட சேதுபுரம் கிராமத்தில் உள்ள 4ஏக்கர் நிலத்தினை 2007ம் ஆண்டு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு எனது கணவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2007ம் ஆண்டு ஆவணம் வா.சா.ஆ.14 ஆகும். அதில் எனது கணவரின் பெயரை லேட்.தியாகராஜன் என்று குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் அதனை அழித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 2 மகன்கள். எனது கணவருக்கு பாத்தியபட்ட பூர்வீக சொத்தை நான் மட்டும் எவ்வாறு விற்றேன் என்றால் எனது கணவரிடம் கேட்டுதான் விற்பனை செய்தேன். சின்னசாமிக்கும் எட்டப்பனுக்கும் எந்த சொத்தை கிரையம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.2 ஆவணத்தினை எழுதி கொடுத்தேன் என்றால் நான் எழுதி கொடுக்கவில்லை, சாட்சி கையொப்பம்தான் செய்ய சென்றேன். எனது தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து எதையும் சின்னசாமி மற்றும் எட்டப்பனுக்கும் எழுதிக் கொடுக்கவே இல்லை என்றால் அவர்கள்தான் சென்று எழுதிகொடுத்தார். நான் தாக்கல் செய்த பி.வா.சா,ஆ.2, பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள குப்புசாமி ஐயர் நிலத்திற்கு தெற்கு, வெங்கிடசாமி நிலத்திற்கும் வடக்கு, நாகலிங்க நாயக்கர் நிலத்திற்கு மேற்கு, ரோட்டுக்கும் கிழக்கு இதற்குட்பட்ட 131/3 நிலம் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில்

ஆவணம் ஏதும் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான் தரப்பினராக உள்ளதால் அந்த ஆவணத்தினை ரத்து செய்ய கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது தேதியில் தாவா சொத்தின் அனுபவம் எங்களிடம் இல்லை என்பதால் நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பி.எஸ்என்எல் ஆண்டனா உள்ள இடத்தை நாங்கள் வாதி கருப்பையா வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. செயலுறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் அளவுகளை துல்லியமாக அளந்து காட்ட ஆணையர் கோராமல் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.